**சாட்சிய வாக்குமூலம்**

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## LAO P. No. 67/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.ம.சா | : | 1 | நாள் | : | 05.02.2026 |
| பெயர் | : | சேகர் | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலூகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05th day of February 2026.

**குறுக்கு விசாரணை:**

ஆலங்குளம் கிராமம் புல எண்.423/2டி ல் உள்ள பாதையில் 90 ச.மீ கையப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட நிலம் 423/3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 05.07.2022ம் தேதி நிலம் கையகப்படுத்தும் அலுவலரால் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அந்த விசாரணையில் விற்பனை ஆவணங்களும் உயில் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 எதிர்மனுதாரர்களும் ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். 05.07.2022ம் தேதி விசாரணைக்கு பின்னர் 423/2டி நிலம் சுப்பிரமணிய பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டதாக ஆவணங்கள் மூலம் காணப்படுகிறது. சுப்பிரமணியபிள்ளை மனைவி பெயர் மீனாட்சியம்மாள் என்று மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்படுகிறது. சுப்பிரமணியபிள்ளை மகள் பிரமு அம்மாள் என்று ஆவணங்கள் மூலம்

குறிப்பிடப்படுகிறது. மேற்படி பிரமு அம்மாள் எழுதி வைத்த உயில் ஆவணமும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேலம்மாள், கணபதி, வள்ளிநாயகம் ஆகியோருக்கு தனித்தனியே சொத்துக்கள் ஒதுக்கி கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அடைய ஏற்படுத்தப்பட்ட பாதையிலும், 1/3 பாகம் உரிமை வழங்கி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் விசாரணையின் போது பிரமு அம்மாள் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 05.02.1976 ல் பிரமு அம்மாள் இறந்ததாக பதிவாகியுள்ளது. பிரமு அம்மாள் வாரிசுகளாக கணபதி, வள்ளிநாயகம் வேலம்மாள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். கணபதி இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ்தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணபதியின் வாரிசுகள் மாரியம்மாள், மீனாட்சி, சண்முகசுந்தரி, நாராயணன், பிரேமகுஞ்சரி, தங்கராஜன், வள்ளிமயில், பிரமு அம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணபதி இறப்பு தேதி 03.11.2017 ஆகும். மாரியம்மாள் என்பவரும் வாரிசு சான்றும், இறப்பு சான்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாரியம்மாள் இறப்பு தேதி 18.11.2018 ஆகும். மாரியம்மாளின் வாரிசுகள் மீனாட்சி, சண்முகசுந்தரி, நாராயணன், பிரேமகுஞ்சரி, தங்கராஜன், வள்ளிமயில், ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். வள்ளிநாயகம் 07.03.2024 இறந்ததாக இறப்பு சான்றிதழ் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. வாரிசு சான்றில் திருமதிபார்வதி, கோமதி, மரகதவள்ளி, செல்வன் வள்ளிநாயகம் என்ற விஜய் (பேரன்) ஆகியோர்கள் வாரிசுகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. பார்வதி

13.12.2006 ல் இறந்ததாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோமதி என்பவரும் 16.04.2007 ல் இறந்து போனதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோமதியின் வாரிசுகளாக எஸ்.கே.பிள்ளை, சிவசங்கரி ஆகியோர் என குறிப்பிட்டு வாரிசு சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஸ்.கே.பிள்ளை என்பவர் 14.07.2018 அன்று இறந்து போனார். அவருக்கு சிவசங்கரி என்பவர் மட்டும் வாரிசு ஆவார். வள்ளிநாயகத்தின் மகன் சுப்பிரமணியன் என்பவர் 30.04.1995 ல் இறந்து போனார் என இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு பொன்னம்மாள், வள்ளிநாயகம் என்ற விஜய், பார்வதி ஆகியோர்கள் வாரிசு என தாக்கல்செய்யப்பட்டுள்ளது. மரகதவள்ளி என்பவர் 15.06.2005 ல் இறந்து போனதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு நெல்லையப்பன், வெங்கடாசலம் என்ற விக்ரம் ஆகியோர் வாரிசுகள் என வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 05.11.2008 அன்று 3 வது கோரிக்கையாளர் கிரயம் பெற்ற ஆவண நகலை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 5 வது இலக்க சொத்தாக புல எண்.423/2 டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பாதை என்று அந்த சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வருவாய் ஆவணத்தில்அவ்வாறு இல்லை. பல்வேறு புல எண்களில்மேற்படி கிரய தாரர் 70 செண்ட் ஆவணம்வாங்கியதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.423/2 டி சொத்துக்கு விஸ்தீரணம் 108.70 ச.மீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விகிதாசாரத்தை தீர்வு காண நாங்கள் முதல்நிலை விசாரணை

எதுவும் நடத்தவில்லை. ஆட்சேபணை தெரிவித்ததால் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். நாங்கள் முதல்கட்ட விசாரணையை நடத்தி இருந்தால் 1, 2 கோரிக்கைதாரர்களுக்கு 1 பாகமும், 3 கோரிக்கைதாரருக்கு 3 பாகமும் கிடைக்கத்தக்கது என்று தெரியும் என்றால் சரியல்ல. சுப்பிரமணியபிள்ளை வாரிசு என்ற முறையில் 1,2 கோரிக்கைதாரருக்கு 1 பாகம் கிடைக்கும் என்று தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. நீதிமன்றம் இழப்பீடு தொகையை விகிதாச்சார அடிப்படையில் பிரித்து வழங்க உத்தரவிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.